செய்தி வெளியீடு எண்.548 நாள்.24 – 8–2007

# தமிழகம் முழுவதும் ஏழை எளிய மக்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள், இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கும் விழாக்கள்

## ஆகஸ்டு 30 அன்று கடலூரில் முதலமைச்சர் கலைஞர் வழங்குகிறார்

திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையிலும், அதனைத் தொடர்ந்து, 2006–2007 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையிலும், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத ஒவ்வொரு வீட்டுக்கும் செப்டம்பர் 15 அண்ணா பிறந்த நாளில் இலவசமாக வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 15.9.2006 அன்று அண்ணா பிறந்த பொன்னாளில் காஞ்சிபுரம் மாவட்டம் படப்பை அருகில் கரசங்கால் கிராமத்தில் உள்ள தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரத்தில் முதற்கட்டமாக 30,000 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். 16.9.2006 அன்று அமைச்சர் பெருமக்கள் தமிழகம் முழுவதிலும் உள்ள அனைத்து சமத்துவபுரக் குடியிருப்புகளுக்கும், நீலகிரி மாவட்ட மக்களுக்கும், சென்னை மாநகரில் இரண்டு குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகளுக்கும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினர்.

அதனைத் தொடர்ந்து, 25 இலட்சம் ஏழை எளிய குடும்பங்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகளை 15.2.2007 அன்று திருவள்ளூர் மாவட்டம் பம்மதுகுளம் கிராமத்தில் முதலமைச்சர் கலைஞர் தொடங்கி வைத்தார். அதே நாளன்று தமிழகம் முழுவதும் நடைபெற்ற விழாக்களில் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு ஏழை எளிய

தாய்மார்களுக்கு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்கினார்கள். தொடர்ந்து தமிழகம் முழுவதும் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன. 19.8.2007 வரை 17 இலட்சத்து 67 ஆயிரத்து 499 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் அளிக்கப்பட்டு 15 இலட்சத்து 32 ஆயிரத்து 370 வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன.

அதேபோல, ஏழை எளிய தாய்மார்களுக்கு எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கும் திட்டம் 14.1.2007 அன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களால் சென்னையில் ஆயிரம் விளக்கு பகுதியில் தொடங்கி வைக்கப்பட்டு, அதே நாளில் தமிழகம் முழுவதும் மாவட்டங்களில் நடைபெற்ற விழாக்களில் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு இலவச எரிவாயு அடுப்புகளை வழங்கினார்கள். 20.8.2007 வரை தமிழகம் முழுவதும் 2 இலட்சத்து 94 ஆயிரத்து 690 எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களின் தொடர்ச்சியாக, முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கடலூரில் ஆகஸ்டு 30 அன்று இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகளையும் ஏழை எளிய தாய்மார்களுக்கு வழங்கும் விழா நடைபெறும். அதே நாளில் தமிழகம் முழுவதும் மாவட்டங்களில் அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்டு இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும், எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகளையும் வழங்கும் விழா நடைபெறும் இடங்கள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| தஞ்சாவூர் மாவட்டம்<br>ஒரத்தநாடு | : | பேராசிரியர் க.அன்பழகன்,<br>மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் |
| | : | திரு. கோ.சி. மணி,<br>மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் |

| | | |
|---|---|---|
| திருச்சி மாவட்டம்<br>லால்குடி | : | திரு. ஆற்காடு நா.வீராசாமி,<br>மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் |
| | | திரு. கே.என்.நேரு,<br>மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் |
| நாமக்கல் மாவட்டம்<br>நல்லிபாளையம் | : | திரு.மு.க.ஸ்டாலின்,<br>மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் |
| | : | திரு.வி.பி.துரைசாமி,<br>மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் |
| பெரம்பலூர் மாவட்டம்<br>நெய்குப்பை கிராமம் | : | திரு. ஆ. இராசா,<br>மாண்புமிகு மத்திய தொலைதொடர்பு மற்றும்<br>தகவல் தொழில் நுட்பத் துறை அமைச்சர் |
| சேலம் மாவட்டம்<br>சேலம் | : | திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்,<br>மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் |
| வேலூர் மாவட்டம்<br>வாணியம்பாடி | : | திரு. துரைமுருகன்,<br>மாண்புமிகு பொதுப்பணித்துறை (ம)<br>சட்ட அமைச்சர் |
| விழுப்புரம் மாவட்டம்<br>மரக்காணம் | : | திரு. க.பொன்முடி,<br>மாண்புமிகு உயர்கல்வி (ம) கனிமவளத் துறை<br>அமைச்சர் |
| கோவை மாவட்டம்<br>மேட்டுப்பாளையம் | : | திரு.பொங்கலூர் பழனிச்சாமி,<br>மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் |
| திண்டுக்கல் மாவட்டம்<br>கணக்கன்பட்டி | : | திரு. இ.பெரியசாமி,<br>மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் |
| கன்னியாகுமரி மாவட்டம்<br>ராமாபுரம் | : | திரு சுரேஷ்ராஜன்,<br>மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் |
| தர்மபுரி மாவட்டம்<br>முக்குளம் கிராமம் | : | திரு பரிதி இளம்வழுதி,<br>மாண்புமிகு செய்தி (ம) விளம்பரத் துறை<br>அமைச்சர் |

| | | |
|---|---|---|
| திருவண்ணாமலை மாவட்டம்<br>போளூர் | : | தண்டராம்பட்டு திரு.எ.வ.வேலு,<br>மாண்புமிகு உணவு அமைச்சர் |
| இராமநாதபுரம் மாவட்டம்<br>பரமக்குடி | : | திரு. சுப.தங்கவேலன்,<br>மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் |
| விருதுநகர் மாவட்டம்<br>அருப்புக்கோட்டை | : | திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன்,<br>மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் |
| காஞ்சிபுரம் மாவட்டம்<br>உத்திரமேரூர் | : | திரு.தா.மோ.அன்பரசன்,<br>மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் |
| சிவகங்கை மாவட்டம்<br>இளையான்குடி | : | திரு.கே.ஆர்.பெரியகருப்பன்,<br>மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் |
| ஈரோடு மாவட்டம்<br>அந்தியூர் | : | திரு.என்.கே.கே.பி.ராஜா,<br>மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் |
| மதுரை மாவட்டம்<br>அலங்காநல்லூர் | : | திரு. தங்கம் தென்னரசு,<br>மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் |
| புதுக்கோட்டை மாவட்டம்<br>திருமயம் | : | திரு. எஸ்.என்.எம்.உபயதுல்லா,<br>மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர் |
| நாகப்பட்டினம் மாவட்டம்<br>வேதாரண்யம் | : | திரு.டி.பி.எம்.மைதீன்கான்,<br>மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் |
| கரூர் மாவட்டம்<br>கோம்புபாளையம் | : | திரு. என்.செல்வராஜ்,<br>மாண்புமிகு வனத் துறை அமைச்சர் |
| கிருஷ்ணகிரி மாவட்டம்<br>கிருஷ்ணகிரி | : | திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன்,<br>மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் |
| திருநெல்வேலி மாவட்டம்<br>நாங்குநேரி | : | திருமதி பூங்கோதை,<br>மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் |
| தூத்துக்குடி மாவட்டம் | : | திருமதி கீதா ஜீவன், |

| | | |
|---|---|---|
| **வேடநத்தம்** | | **மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** |
| **தேனி மாவட்டம்**<br>**போடிநாயக்கனூர்** | **:** | **திருமதி ஆ. தமிழரசி,**<br>**மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்** |
| **திருவள்ளூர் மாவட்டம்**<br>**கவரப்பேட்டை** | : | **திரு.கே.பி.பி.சாமி,**<br>**மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்** |
| **திருவாரூர் மாவட்டம்**<br>**நன்னிலம்** | : | **திரு. உ.மதிவாணன்,**<br>**மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்** |
| **நீலகிரி மாவட்டம்**<br>**குன்னூர்** | : | **திரு. கா.இராமச்சந்திரன்,**<br>**மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்** |

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.